**தற்போதய சூழ்நிலையில் சுகாதாரத் திணைக்களத்தின் மிகமுக்கியமான அறிவித்தல்**

எமது நாட்டில் சில மாவட்டங்களில் கொரோனா மிக வேகமாகப் பரவி வருவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.தற்போது வெளிமாவட்டங்களில் இருந்து உரிய அனுமதியின்றி இரகசியமாக முறையற்ற விதத்தில் வருகை தருபவர்களினால் எமது மாவட்டத்தில் கொரோனா நோயப் பரவல் ஏற்படக்கூடிய பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வருகை தருவது,வருகை தருபவர்களுக்கு புகலிடம் வழங்குவது, வருகை தருபவர்கள் தொடர்பான தகவல்களை தெரியப்படுத்தாமல் இருப்பது ஆகியன தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

எனவே உங்களது பிரதேசங்களில் அவ்வாறு எவரேனும் புதிதாக வந்திருப்பதாக அறிந்தால் உடனடியாக உங்களது பகுதிக்குரிய சுகாதார உத்தியோகத்தருக்கோ அல்லது 0212226666 எனும் வடக்கு மாகாணத்திற்கான அவசர தொலைபேசி இலக்கத்திற்கோ உடனடியாகத் தெரியப்படுத்துங்கள்.இவ்வாறு தெரியப்படுத்துவது கொரோனாவிலிருந்து எம்மையும்,எமது சமூகத்தையும் பாதுகாப்பதற்கு நீங்கள் செய்யும் பாரிய கடமையாகும்.

**உங்களின் பாதுகாப்பு**

**உங்களின் கைகளிலேயே……**

தகவல்

சுகாதாரத் திணைக்களம்

வடமாகாணம்.